Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 7

## இலக்கியங்களில் மருத்துவம்

*ப. கனகவள்ளி, முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர்* [1] ,
நெறியாளர் முனைவர் D . ராஜசீலி[2]
[1]அன்னை தொரசா மகளிர் பல்கலைக்கலகம், கொடைக்கானல்.
மின்னஞ்சல்: kanagavalip@gmail.com
[2]ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி(தன்னாட்சி) .

## *முன்னுரை*

தமிழ் மக்களிடம் நிலவிவரும் மருத்துவ அறிவை முதன்முறையாகத் தொகுதிப் படுத்தியமையையும், முனிவர்களும், ஞானிகளும் கண்டறிந்த மருத்துவ உண்மைகளைத் தமிழ் இலக்கிங்கள் வழியாக ஆராய்ந்தறிந்து அவற்றை வெளிப்படுத்தும் முறைமையையும் வெளிப்படுத்துவனவாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

ஞானிகளும், முனிவர்களும் தமது சீடர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகளும், சீடர்கள் குருபத்தியுடன் பணிசெய்து அறிவைப்பெற்றுத் தாம் பெற்ற கல்வியைச் சமூகத்திற்கு அறித்துமாறும் குருகுல பாரம்பரியத்தில் பேசப்படுவனவாகும். குருகுல பாரம்பரியத்திலே தமிழ் இலக்கியத்தையும், தமிழ் மருத்துவத்தையும் கற்ற சான்றோர்கள், தம் குருவானவர் வகுத்துறைத்தபடி கட்டுப்பாட்டுடனும் பயபக்தியுடனும் தமது பணியை மேற்கொண்டு வந்திருக்கின்றனர். மருத்துவர்

கைக்கொண்டு ஒழுகவேண்டிய ஒழுக்கநெறிகளும் தமிழ் மருத்துவத்தில் தோன்றின என்பதும் இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலே மருத்துவக்கலை எவ்வாறு வளர்ந்துவந்திருக்கிறது, சித்தர்கள் சமூக மருத்துவத்துறையில் எத்தகைய பணியாற்றினார்கள், சோழர்காலத்திலே மருத்துவம் எவ்வாறு வளர்ந்திருந்தது , திருமந்திரத்திற் கூறப்பட்டுள்ள மருத்துவ கருத்துகள், போன்ற இலக்கியங்களில் உள்ள மருத்துவச் சிந்தனைகளையும் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

**சங்க இலக்கியங்களில் மருத்துவம்**

**தொல்காப்பியத்தில் மருத்துவம்**

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களால் ஆனாது மனித உடலாகும். வாதம், பித்தம், கபம் என்ற முக்குற்றங்களின் அடிப்படையில் தோன்றும் நோய்களுக்குப் மருத்துவம் செய்யும் முறையே மருத்துவமாகும். இம் மூன்றும் மனித உடலில் முறையே ஒன்று, அரை, கால் என்ற அடிப்படையில் அமைந்துள்ளன.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்

மறைமொழி தானே மந்திரம் என்ப" - (தொல், செய் - 178)

சித்த வைத்திய முறைகளில் மணி, மந்திர, ஔடதம் ஆகியவற்றை வகைப்படுத்தி கூறுகின்றனர். மணி என்பது இரசத்தைக் கட்டி மணி போலாக்கி இரசமணியைக் குறிக்கும். இதனை இரசகுளிகை, சூதக்குளிகை, ககனக்குளிகை என்பர். மருந்து வகைகளில் இரசம் சிறந்ததென்ற காரணத்தினாலேயே சித்தர்கள் இரசத்தினாலாகும் மணியை முதலிற் கூறினர்.

சித்த வைத்தியர்கள் ஓரறிவு முதல் ஆறறிவு வரை படைத்த உயிர் வர்க்கம் அனைத்தையும் அறிந்து வைந்திருந்தார்கள் ஓரறிவு முதல் ஆறறிவு படைத்த உயிர் வர்க்கங்கள் பற்றிப் குறிபட்பிட்டிருத்தல் ஈண்டு கவனிக்கத் தக்கவாகும்.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே

இரண்டறி வதுவே அதனோடு நாவே

மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே

நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே

ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே

ஆறறி வதுவே அவற்றோடு மனனே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தனரே"

இவற்றில் தாவரங்கள் இயல்புகள், பஞ்சபூத இயல்புகளுக்கமைய மூலிகைகளின் இயற்குணங்கள், அவற்றின் செயற்பாடுகளைக் கூறுகின்றன.

மனிதனுடைய உள்ளம் தாக்கப்படும் போது உடல் பாதிப்படைக்கிறது. அவ்வாறே உடல் பாதிக்கப்படும்போது உள்ளமும் பாதிக்கப்படுகிறது. இரண்டு ஒன்றையொன்று சார்ந்து செயற்படுகின்றன. உள்ளத்தின் செயற்பாட்டினால் உடலிலே தோன்றும் குறிகளைத் தொல்காப்பியர் 'மெய்ப்பாடு' என்றார். மருத்துவர் இதனை 'மெய்க்குறி' என்பார். உடலில் நோய் தோன்றும்போது காணப்படும் குறிகளை நோயாளி தானே உணரும் குறிகள் (Subjective Symptoms) வைத்தியர் நோயாளியிடம் தான் காணும் குறிகள்(Objective Symptoms) என இருவகையாகப் பகுத்துக் கூறுவர்.

உடலிலே நோயின் அறிகுறியாக முதலிலே தோன்றும் குறிகளைப் "பூர்ப ரூபம்" (முதல் நிலைக் குறிகள்) என்றும், நோய் வந்தபின் காணப்படும் குறிகள் " ரூபம்" என்றும் பெயர் பெறும். வைத்திய நூல்களிலே நோய்க்ளுக்குரிய மெய்க்குறிகள் பற்றிய விவரங்கள் பெரிதும் கூறப்பட்டுள்ளன.

## திருமந்திரத்தில் மருத்துவம்

உயிர், உடல் ஆகிய இரண்டு விடயங்களையும் இறைவனோடு தொடர்பு படுத்திய மருத்துவ சிந்தனைகளையும் சித்த மருத்துவம் பெரிதும் பேசுகின்றது. இதனையே திரு மூலர் "உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்" (திருமந்திரம் 704) என்று குறிப்பிடுகின்றார். எனவே மருத்துவத்தில் இவை இரண்டும் மிக முக்கியமானவை. தொல்காப்பியர் எழுத்திலக்கணம் வகுக்கும்போது முதலில் அதிலுள்ள இருவகை எழுத்துக்களை உயிர் எழுத்தென்றும் மெய் (உடல்) எழுத்தென்றும் வகைப்படுத்திப் பெயரிடலானார். மேலும் உயிரும், உடம்பும் தனித்தனியானவை. ஆயினும் அவை இணைந்தே செயற்படுவன. அதுபோன்றே இவ்விரு எழுத்துக்களும் தனித்தனியானவை என்பதை "உடம்பொடு நின்ற உயிரும் இல்லை" (தொல், சொல் - கிளவி -1) எனக் கூறியிருப்பதும் ஈண்டு ஒப்பிட்டு நோக்கத்தக்கதே ஆகும்.

## பத்துப்பாட்டில் மருத்துவம்

சங்க அகத்திணைப் பாடல்களிலே 'நோய்' என்ற சொல் பெரிதும் பயின்றுவந்துள்ளது. திருமுருகாற்றுப்படையில் "நோயின்றி இயன்ற யாக்கையர்" (183) பற்றிய செய்தி கூறப்படுகிறது. "நால்வேறு இயற்கை பதினொரு மூவரொடு

(167) என்ற திருமுருகாற்றுப்படைப் பாடல் வரிக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதும் போது, அதில் மருத்துவர் இருவர் பற்றிக்குறிப்பிட்டுள்ளமையும்(7) நோக்கற்பாலது

சிறுபாணாற்றுப் படையின் இறுதியிலுள்ள தனிவெண்பா ஒன்றில் "நோய் தணி மருந்து" பற்றிய குறிப்புங் காணப்படுகிறது. கலித்தொகை 60 ஆம் பாடலில் "நோய் தீருமருந்து" என தொடர் வரக்காணலாம்.

பிணி, வருத்தம் என்ற சொற்களும் சங்க இலக்கியத்திலே பயின்று வந்துள்ளன. பொதுவாக நோய் என்பது மனம் சார்ந்த காமநோய் குறித்துவர (Psysiological Factor), பிணி என்பது உடல் சார்ந்த நோயினைச் சுட்டிற்று (Psysiological Factor), "உயங்குபிணிவருத்தமொடு இயங்கல்செல்லாது" (நற்.46) "பெண்டீரும் பிணியுடையீரும்" (புறம்.9) " நடுங்குபிணி...." (நற்.262) என்ற இலக்கியப் பாடல்கள் பிணியைப்பற்றிக் கூறுகின்றனர்

சுரநோய் பற்றி இந்திய மருத்துவ நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. உடல் வெப்ப அதிகரிப்பால் உண்டாகும் நோய் சுரமாகும். உடலில் வெப்பம் அதிகரித்துக் காணப்படும்போது அதனைச் சுரநோய் என மருத்துவம் குறிப்பிடுகிறது. ஆனால் அதிக வெப்பம் காணப்படும் பாலை நிலத்தைச் சுரம் என்கிறது சங்க இலக்கியம் சுரநோயும் பல்வகை அடைகளைப் பெறுதல் போன்றே பாலை நிலமும், அருஞ்சுரம், வெஞ்சுரம் என்ற அடைகளைப் பெற்றுள்ளமை ஒப்புநோக்கற்பாலது.

நோய் வருமுன் காத்தல், வந்தபின்போக்குதல் என மருத்துவ சிகிச்சை முறை இரு வகைப்படும். நோய்க்குறி கண்டவுடனோ அல்லது நோய் முற்ற முதலோ பரிகாரம் தேடவேண்டும். அப்போது நோயை அகற்றுதல் எளிது. நோய் முற்றிய பின்பு செய்யும் மருத்துவம் முற்றிலும் பயனளிப்பதில்லை. இதனைக் கலித்தொகைப் பாடல் ஒன்று வருமாறு குறிப்பிடுகின்றது. அவை பின்வருமாறு

"அழிந்து அயல் அறிந்த எவ்வம் மேற்படப்
பெரும்பேதுறதல் களைமதி பெரும!
வருந்தியசெல்லல் தீர்த்த திறன் அறிஒருவன்
மருந்து அறை கோடலின் கொடிதேயாழநின்
அருந்தியோர் நெஞ்சம் அறிந்து உகவிடினே"

(கலித்தொகை)

என்ற செய்தி கலித்தொகை விளக்குகின்றது.

சங்ககாலத்து இலக்கியங்களிற் “சூல்” என்ற சொல் பயின்று வருகின்றது. அது கருவுற்ற நிலையை கருவுத்த சுட்டிற்று. பெண் உண்ணும் உணவு பற்றிச் செய்திகளைக் குறுந்தொகைப்பாடல்கள், நற்றிணை பாடல்கள், புறநானூற்று பாடல்களிலும் காணப்படுகின்றன. அவை

“கடுஞ் சூல் மகளிர் போல நீர் கொண்டு”

(குறுந் -287)

“கடுஞ் சூல் வயலொடு கானல் எய்தாது...”

(நற்.. - 263)

“எய்யா இளஞ்சூல் செய்யோன் அவ்வயிற்று

கடுஞ்சூல் மகளிர் போல நீர் கொண்டு

“சூல் முதர் மடப்பிடி நாள்மேயல் ஆகும்”

(நற்.. - 116)

கருவுற்ற பெண்கள் “மசக்கைநோய்” உடையோராகப் புளிப்புப் பண்டங்கள், களிமண் உருண்டை முதலாம் பொருட்களைப் பிறர் அறியாவண்ணம் விரும்பியுண்ணுவதுண்டு என்பதையும் புறநானூற்றுப் பாடல்களிலும் காணப்படுகின்றன.

“பிறர்மண் ணுண்ணும் செம்மல் நின்நாட்டு

வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது

பகைவ ருண்ணா அருமண் ணிலையோ”

(புறம் . 25: 13.15)

## நீரும் உடம்பும்

உடலுக்கு நீர் மிக மிக இன்றியமையாததென்று என்ற மருத்துவ உண்மையைப் புலவர்களும் நன்கு அறிந்திருந்தார்கள் “

"எல்லா உயிர்க்கும் ஏமமாகியது நீர்"

(புறம்: 1: 11-12)

என்ற கருத்தைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் குறிப்பிட்டுள்ளார். மேலும் புறநானூற்றில் வரும் பாடல்

"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலமும் புணரியொர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே" (புறம். 18 : 18 - 24)

ஆகிய பாடல் வரிகளும் இவ்வுண்மையை உணர்த்துகின்றன. எனவே உடலினைப் பேணவற்புறுத்தப்படுவதாயிற்று ஆகும்.

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மருத்துவம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலே திருக்குறள், ஆசாரக்கோவை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகிய நூல்களில் நீதி, ஒழுக்கம், நல்வாழ்வுப் போதனை, மருத்துவக் கருத்துக்கள் பெரிதுங் காணப்படுகின்றது

## ஏலாதியில் காணப்படும் மருத்துவச் செய்திகள்

மனிதவாழ்வுக்கு நல்லறிவுப் போதனையூட்ட எழுந்த அறநூல்களில் ஏலாதியுமொன்று, அறநூல்கள் உளப்போதனை செய்து, ஆத்மபலத்தைக் கூட்டுந் தன்மை வாய்ந்தவை. இதனிடையில் உடல் ஆரோக்கியத்திற்கும் ஏற்றவகையில் மருத்துவ ரீதியான போதனைகளும் அறநூல்களிலே கூறப்படும் பொதுத் தன்மையும் கவனிக்கப்பட வேண்டியதாகும். இதனாலேயே அறம் கூற வந்த புலவர்கள் அதனூடாக மருத்துவ போதனைகளையும் கூறகின்றர்.

ஏலம் மருந்துப் பொருளாகவும் வாசனைத் திரவியமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. ஏலத்தை ஆதியாகக் கொண்டு பல மூலிகை பொருட்களைச் சேர்த்துச் செய்யும் கூட்டு மருந்துகள் உள்ளன. அவற்றுள் "ஏலாதிக் குளிகை", ஏலாதித் தைலம்", "ஏலாதி வடகம்" என்ற குறிப்பிடுகின்றன.

“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” எனவும் “உண்டி முதற்றே உணவின் பிண்டம்” என்ற பாடலின் வரியின் மூலமாக அன்னதானத்தின் மூலம் வீட்டின்பம் பெறலாம் என்றும் அன்னதானம் புரிந்தோர் அதன் பயனாக இவ்வுலகிலும், மோட்ச நிலையிலும் நல்வாழ்வு பெற முடியும் எனவும் கணிதமேதாவியார் கூறுகின்றார்.

“புலால் மயங்கான்” என்ற தொடரைக் கையாண்டுள்ளது. புலால் உண்பதே பாவம் என்றிருக்கப் புலாலைப் பேராசை கொண்டு அளவுக்கதிகமாக உண்டுகளிக்கும் “புலால் மயங்குதல்” என்ற நிலையைக் கண்டிக்கிறது. ஒருவன் அளவுக்கதிகமாக மாமிச உணவை உட்கொள்வதால் பலவித நோய்கள், உடல்பருத்தல் போன்றவை ஏற்படுகின்றன. எனவே உணவுப் பழக்கத்தை அளவோடு கைக்கொள்ள வேண்டும் என்ற பண்பினை இம்மருந்துவ நல்ல வழி காட்டியாக அமைகின்றன.

## திடுகடுகத்தில் மருத்துவம்

திடுகடுகம் என்பது மருந்து பெயரால் ஆக்கப்பெற்ற அறநூலாகும். திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றும் மருந்து சரக்குகளையும் சுட்டும் சொல்லாகும். இம்மூன்று மருந்துகளும் உடல் நோய் போக்குவது போன்று இந்நூலிலே கூறப்பட்ட கருத்துக்கள் உளப்பிணியையும், உடற்பிணியையும் போக்கும் தன்மை வாய்ந்தாகும். என்பதை பின் வரும்பாயிரச் செய்யுள் சான்றாக…

“உலகில் கடுகம் உடல்நோய் மாற்றும்

அலகில் அகநோய் அகற்றும் - நிலைகொள்

திரிகடுகம் என்னும் திகழ்தமிழ்ச் சங்கம்

மருவு நல்லாதன் மருந்து”

திடுகடுகம் என்பது மருந்து பெயரால் ஆக்கப்பெற்ற அறநூலாகும். திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றும் மருந்து சரக்குகளையும் சுட்டும் சொல்லாகும். இம்மூன்று மருந்துகளும் உடல் நோய் போக்குவது போன்று இந்நூலிலே கூறப்பட்ட கருத்துக்கள் உளப்பிணியையும், உடற்பிணியையும் போக்கும் தன்மை வாய்ந்ததாகும்.

நீராடிய பின்பே உணவு உட்கொள்ள வேண்டும்;, (செய் -27), ஆடையில்லாமல் நீராடக் கூடாது என்ற அறிவுரையும் இந்நூலிற் (செய் - 71) காணப்படுகின்றன.

## சிறுபஞ்சமூலம் காட்டும் மருத்துவ செய்திகள்

சிறுபஞ்சமூலம் என்பது ஐந்துவகைச் சிறு வேர்களால் ஆன ஒரு மருந்து எனப்பொருள்படும். சிறுவழுதுணைவேர், நெருஞ்சி வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், கண்டங்கத்தரி வேர் இந்த ஐவகை வேர்கள் சேர்ந்து பல்வேறு நோய்களையும் தீர்க்கும் என்பதை பதார்த்த குண சிந்தாமணி கூறுகிறது. அதை போல் சிறுபஞ்சமூலம் என்ற நூலிலுள்ள ஒவ்வாரு பாடலிலும் கூறப்படும் ஐந்து கருத்துக்களும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உறுதுணை புரிகின்றன.

“ ஈன்றெடுத்தல் சூல்புறஞ் செய்தல குழவியை

என்றெடுத்தல் சூலேற்ற கன்னியை ஆன்ற

அழ்ந்தாளை இல்வைத்தல் - பேர் அறமாஆற்றி

மொழிந்தார் முதுநூலார் முன்பு”

(செய் - 70)

இந்நூலிலே தாயின் கருவளம் பேணப் படவேண்டும் என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டடுள்ளது. கருப்பையில் உருவான கரு அழிந்து போகாமற் காத்தல், கரு சிதைந்தால் மீண்டும் கருப்பம் தரித்தல், பிறந்த குழந்தைக்கு நோய் ஏற்பட்டால் உடனே அதற்கு மருந்து அளித்தல், குழந்தையை அச்சுறுத்தாமற் பேணி வளர்;த்தல் போன்ற மருத்துவச் செய்திகளை நெறிப்படுத்துகின்றன.

ஆரோக்கிய வாழ்வை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டது சிறுபஞ்சமூலம் நூல் கூறும் மருத்துவக் கருத்துகள் ஆகும்

## முடிவுரை

நம் உடலில் தலை முதல் பதம் வரையில் ஏற்படும் நோய்களுக்கு அறுமருத்தாக அமையும், அவற்றை மெய்பிக்கும் வண்ணம் இக்கட்டுரையில் அமைத்துள்ளது. இலக்கியங்களில் மருத்துவம் என்பது ஆதி முதல் அந்தம் வரையிலும் மருத்துவக் குறிப்புகள் அதிகமாக உள்ளன. இலக்கியம் என்பது ஒரு ஆழ்கடல் அதில் முழ்கி முத்து எடுப்பது என்பது மிகவும் கடினமான செயல் அவ்வாறு இலக்கியங்களில் மருத்துவம் என்ற தலைப்பில் அமைந்த இக்கட்டுரையில் சில முத்துக்கள் மட்டும் எடுத்து தொகுக்கப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்பு

1. சங்க இலக்கியம் - கலித்தொகை (மூலமும் உரையும்)

   முனைவர் அ. விசுவநாதன்

   முதல் பதிப்பு : ஏப்ரல், 2004

   சென்னனை - 600 098

2. சங்க இலக்கியம் - எட்டுத்தொகை

   ஐங்குறுநூறு (மூலமும் உரையும்)

   புலியூர்க்கேசிகன்

   முதல் பதிப்பு : 2010

   திருச்சி - 620 001.

3. குறுற்தொகை (மூலமும் உரையும்)

   புலியூர்க்கேசிகன்

   முதல் பதிப்பு : 2004

   சென்னனை - 600 098

4. சங்க இலக்கியம் - அகநானூறு (மூலமும் உரையும்)

   முனைவர் இரா. செயபால்

   முதல் பதிப்பு : ஏப்ரல், 2004

   தஞ்சாவூர் - 613 007